**செய்தி வெளியீடு எண்: 346** **நாள்: 27.05.2018**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

மாண்புமிகு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தலைமையில், மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள், சென்னை–2, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியை இன்று (27.5.2018) காலை திறந்து வைத்தார்கள். மாண்புமிகு பேரவை துணைத் தலைவர், **முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்** அவர்கள் வரவேற்பு நல்கினார்கள்.

வரவேற்பறை, உணவருந்தும் அறை, படுக்கையறை ஆகிய வசதிகள் கொண்டு 593 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கென 60 விடுதி அறைகள், வெளி மாநில சிறப்பு விருந்தினர்களுக்கென 8 அறைகள் மற்றும் 2,722 சதுர அடியில் 250 பேர் அமரக்கூடிய மாநாட்டு அறை உள்பட மொத்தம் 76,721 சதுர அடியில் இவ்விடுதி கட்டப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.**39.63** கோடியாகும். இக்குடியிருப்பில், வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதிக்கான கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி, மின் மோட்டார் அறை, சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் வசதி, மின்தூக்கி உள்ளிட்ட வசதிகள் உள்ளன. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சென்னை வருகையில் அவர்கள் தங்குவதற்கு ஏதுவாக இவ்விடுதி அமையும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை பொது மக்கள் இணைய தளத்தில் பெறும் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில் அறைகளை இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்வதற்கான வசதியை மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**